அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 09/2025

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.04.02

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க தாபனங்களில் திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல்**

ஒப்பீட்டளவில் நாட்டில் துரித சனத்தொகை அபிவிருத்திக்கு ஏற்ப அதிகரித்த கழிவு உற்பத்தியின் காரணமாக கழிவு முகாமைத்துவம் கடுமையான சவாலுக்கு உள்ளாகி இருப்பதுடன், கழிவு உற்பத்தி செய்பவர்களாக அவ் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு, அனைத்து பிரஜைகளுக்கும், அரசாங்கம் போன்று அரசாங்கமல்லாத நிறுவனங்களுக்கும் ஒரே மாதிரியாக பொறுப்பாக்கப்பட்டுள்ளது. அதனால் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தோன்றியுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்காக கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைகளுக்கு இணைந்த வகையில் அனைத்து அரசாங்க தாபனங்களிலும் நிலைத்திரு கழிவு முகாமைத்துவ முறைமையொன்றுக்காக உள்ளடக்குவது மிகவும் முக்கியமானதாகும்.

02. பெரும்பாலான அரசாங்க தாபனங்கள் நகர பிரதேசங்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவ் தாபனங்களுக்கு நாளாந்தம் வரும் பாரியளவான அரசாங்க உத்தியோகத்தர்களின் மூலம் உருவாக்கப்படும் கழிவு கட்டுப்பாட்டிற்காக ஒழுங்கான முறைமையொன்றினை பின்பற்றுவது மிகவும் முக்கியமாகும். அனைத்து அரசாங்க தாபனங்களும் இவ் சுற்றிக்கையின் மூலம் உள்ளடக்கப்படுவதுடன், அவ் தாபனங்கள் கடுமையான அவதானத்தை செலுத்தி கீழ்வரும் ஆலோசனைகளின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**2.1 அனைத்து அரசாங்க தாபனங்களும் 3R எண்ணக்கருவிற்கு உள்ளடங்குதல்**.
(**மட்டுப்படுத்தல், மீண்டும் பயன்படுத்தல் மற்றும் மீள்சுழற்சி**)

3R எண்ணக்கருவிற்கு உள்ளடக்குவதற்காக பின்பற்ற வேண்டிய உபாய வழிமுறைகள்.

2.1.1 கடமையின் போது இயன்றளவு கடதாசி பயன்பாட்டினை குறைத்தல்

நாளாந்த கடமைகளின் போது வெளியேற்றும் கடதாசியின் அளவைக் குறைப்பதற்காக இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல்தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் ஊடகத்தினை பயன்படுத்துவதுடன், அச்சிடல் நடவடிக்கையின் போது கடதாசியின் இருபுறமும் பயன்படுத்துவதற்காக பணியாட்தொகுதியை அறிவுறுத்தல்.

2.1.2 தனி பயன்பாட்டு பிளாஸ்டிக் பயன்பாட்டினை இயன்ற வரையில் குறைக்க முயலுத மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பயன்பாட்டின் மூலம் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துவதைக் குறைத்தல்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் வெளியிடப்படும் இலக்கம் 2341/30 மற்றும் 2023 ஜீலை மாதம் 19 ஆம் தினத்தன்றான வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தனி பயன்பாட்டு பிளாஸ்டிக் (Single use plastic) 09 விடயங்களை இந்நாட்டிற்குள் பயன்படுத்துவதற்கு தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து தாபன தலைவர்களும் தமது தாபன சூழலுக்குள் எத்தகைய முறையிலும் தனி பிளாஸ்டிக் வகைகளை பயன்படுத்துவதை தடுத்தல் மற்றும் மாற்று பயன்பாடுகள் தொடர்பில் பணியாட்தொகுதியை உற்சாகப்படுத்த வேண்டும். இங்கு,

- உணவு கொண்டு வருவதற்காக உக்கும் உணவுப் பொதிகள் அல்லது மீளப் பயன்படுத்தக்கூடிய உணவுப் பெட்டிகளின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்.
- கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் / பட்டறைகளை நடத்தும் போது பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களை பயன்படுத்துவதை குறைப்பதற்கான வழிமுறைகளை செயல்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துதல்.
- அரச தாபனங்களில் அமைந்துள்ள உணவகங்களிலும் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் உணவுப் பொதிகளின் பயன்பாட்டினை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- தாபனங்களுக்குள் பல்வேறு செயல்பாடுகளுக்காக பதாகைகள் மற்றும் விளம்பர பலகைகளை வடிவமைப்பதில் மற்றும் தாபனத்தினால் நடத்தப்படும் விழாக்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மற்றும் முறைமைகளை உள்வாங்குதல்.

2.1.3 சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய உற்பத்திகளுக்காக முன்னுரிமை கிடைக்கும் திட்டமிடல் கொள்கைகளை செயல்படுத்துதல்.

திட்டமிடல் நடவடிக்கைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் மீள் சுழற்சி செய்யக்கூடிய உற்பத்திகளை வாங்குவதற்காக காணப்படும் ஏற்பாடுகளுக்குள் முன்னுரிமை வழங்கப்படுதலும், அதற்காக திட்டமிடல் அறிவித்தல்களுக்குரிய அளவுகோல்களை உள்ளடக்குதல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் திட்டமிடல் குழுக்களை அறிவுறுத்தல் செய்ய வேண்டும்.

2.1.4 நிலைத்திரு நுகர்வுப் பழக்கங்களை பின்பற்றுதல்.

அனைத்து பணியாட்தொகுதிக்கும் நிலைத்திரு நுகர்வுப் பழக்கங்களைப் பின்பற்றுவதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் நிலைத்திரு பழக்கங்களைப் பின்பற்றுவதை ஊக்கப்படுத்தல், அனைத்து தாபன வளாகங்களையும் கழிவுகள் அற்ற வலயங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

**2.2 கழிவுகளை சேகரித்தல் மற்றும் அகற்றுதல்**

2.2.1 கழிவுகளை முறையாக சேகரித்தல்

கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கையின்படி, கழிவு உற்பத்தியின் போது வேறாக்கி அப்புறப்படுத்தல் தொடர்பில் அவதானத்தை செலுத்தி, தாபன வளாகத்தில் உற்பத்தியாகும் கழிவுகளை பெயரிடப்பட்ட தொட்டிகளில் அகற்றுவதற்கான முறைமையொன்றை நடைமுறைப்படுத்துதல். அதாவது;

- உக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் (உதா:- மீதி உணவு, தோட்ட குப்பை)
- மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் (உதா:- கடதாசி, PET போன்ற பிளாஸ்டிக், உலோகங்கள், கண்ணாடி)
- மீள்சுழற்சி செய்ய முடியாத கழிவுகள் (உதா:- பொசிலின், நார் பொருட்கள்)
- பாதுகாப்பற்ற கழிவுகள் (உதா:- இலத்திரனியல் கழிவுகள், இரசாயன கழிவுகள்)

2.2.2 கழிவுகளை முறையாக அகற்றுதல்

முறையாக கழிவுகளை சேகரிப்பதற்காக உள்ளூராட்சி தாபனங்கள் அல்லது சான்றுரைபடுத்தப்பட்ட கழிவுகளை சேகரிக்கும் தாபனங்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்தி, முறையான வழிமுறைகளின்படி சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

2.2.3 சாத்தியமான இடங்களில் கரிம கழிவுகளை உரமாக்குவதை ஊக்குவித்தல்.

தினசரி உற்பத்தியாகும் கழிவுகளில் அதிக சதவிகிதம் கரிமக் கழிவுகளாக இருப்பதால் அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் மீதேன் போன்ற பச்சை வாயுக்களின் உருவாக்கத்தினால் ஏற்படும் நேரடித் தாக்கத்தைக் குறைப்பதற்காக, சாத்தியமான தாபன வளாகங்களில் உரத் தொட்டிகள் மூலம் உரம் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தல்.

2.2.4 உரிமம் பெற்ற மீள்சுழற்சி நிறுவனங்களுடன் இணைந்து ஒத்துழைப்புடன் மீள்சுழற்சி செய்வதை ஊக்குவித்தல்.

உற்பத்தியாகும் மீள்சுழற்சி செய்யக்கூடிய நிலையிலுள்ள கழிவுகளை முறையாகப் பிரித்து, உள்ளூராட்சி தாபனங்களின் மூலம் அதிகாரம் பெற்ற மீள்சுழற்சி நிறுவனங்களுக்கு வழங்கி மீள்சுழற்சியை செய்வதை ஊக்குவித்தல். அங்கு அனைத்து தாபனங்களுக்கும் தங்கள் தாபன வளாகங்களில் உற்பத்தியாகும் மீள்சுழற்சி செய்யக்கூடிய நிலையிலுள்ள கழிவுகளை மீள்சுழற்சி நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான இயலுமையும் உள்ளது.

2.2.5 கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்களைப் பின்பற்றி அபாயகரமான மற்றும் இலத்திரனியல் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றல்.

அரசாங்க தாபனங்களில் உற்பத்தியாகும் அபாயகரமான கழிவுகள், விசேடமாக இலத்திரனியல் கழிவுகளை முறையாக முறையான வழிகாட்டுதல்களைப் பின்பற்றி அகற்றப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**2.3 அறிவுறுத்தல் மற்றும் வலு அபிவிருத்தி மற்றும் பின்புல விசாரணை**

2.3.1 பணியாட்தொகுதியை அறிவுறுத்தல்.

நிலைத்திரு கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தாபன பணியாட்தொகுதிக்காக சூழ்நிலைக்கேற்பவாறு பயிற்சிகள் மற்றும் அறிவுறுத்தல் செயற்திட்டங்களை நடத்துவதன் மூலம் 3R எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

2.3.2 கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை கண்காணித்தல்.

அனைத்து தாபனங்களினாலும் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை முறையாக செய்யும பொருட்டு எடுக்கப்படும் நடவடிக்கைகளின் நிலைத்திரு தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, அவ் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு பொருத்தமான உத்தியோகத்தரொருவரை பெயர் குறித்து பொறுப்புக்களை ஒப்படைத்தலும், பொருத்தமான காலத்திற்குள் அவ் மேம்பாட்டினை கலந்தாலோசனை செய்தலும் செய்ய வேண்டும்.

2.3.3 சேவைபெறுநர்களை அறிவுறுத்தல்.

அனைத்து தாபன தலைவர்களின் மூலமும் தங்கள் தாபன வளாகத்தில் நடத்தப்படும் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான பொருத்தமான இடங்களில் அறிவித்தல்களை காட்சிபடுத்தி, தாபனத்திற்கும் வரும் அனைத்து சேவைபெறுநர்களையும் அறிவுறுத்துவதினூடாக சேவைபெறுநர்களையும் அதற்கு இணைந்த வகையில் சேவையாற்றுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

03. இந்த சுற்றறிக்கை அமுல்படுத்தப்பட்ட நாளிலிருந்து 06 மாத காலத்திற்குள், தங்களது தாபனங்களில் முறையான கழிவு முகாமைத்துவ திட்டமொன்றை அபிவிருத்தி செய்து செயற்படுத்த வேண்டும். அதற்காக, தாபனத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்களும் உரிய உள்ளூராட்சி தாபனங்கள் மற்றும் மற்றும் அதிகாரம் பெற்ற மீள்சுழற்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கால எல்லையுடன் முறையான திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன் அவ் திட்டத்தின் நிலைத்திரு தன்மையை உறுதிசெய்யும் கண்காணிப்பு செயற்திட்டத்துடன் அதனை செயற்படுத்த வேண்டும்.

ஒப்பம் /எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக ,மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112662340
தொலைநகல் : 0112692158
மின்னஞ்சல் முகவரி : ade-i@pubad.gov.lk